**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி**

முன்னிலை: திரு.க.யோகேஷ்வரன், B.A.,L.L.B.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், காரியாபட்டி.

2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 31—ம் நாள் வெள்ளிக்கிழமை

**புதிய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.513/2025**

**பழைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.9/2013**

*****

| | |
|---|---|
| குற்ற முறையிடுபவர் | அரசு தரப்பில் காரியாபட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர், குற்ற எண்.163/2012 |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை—1 | திரு.V.செந்தில்குமார், M.A., B.L., |
| எதிரி | விஜயன்,<br>த/பெ.கந்தசாமி,<br>2/93, மேற்கு அசோக் நகர்,<br>கவுண்டன்பாளையம்<br>கோயம்பத்தூர் மாவட்டம். |
| எதிரி தரப்பில் வழக்கறிஞர் | திரு.G.ரமேஷ்., B.A., B.L., |
| சம்பவம் நடந்த நாள் | 26.04.2012 |
| முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாள் | 26.04.2012 |
| இறுதி அறிக்கை நாள் | 10.06.2012 |
| இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | 10.01.2013 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 11.01.2013 |
| எதிரி மீது குற்றம் வினவப்பட்ட நாள் | 05.06.2013 |
| விசாரணை ஆரம்ப நாள் | 26.05.2014 |
| விசாரணை முடிவுற்ற நாள் | 15.07.2026 |
| தீர்ப்பு நாள் | 31.07.2026 |

**எதிரியின் விவரங்கள்**

| எதிரியின் பெயர் | எதிரி சரண்டரான நாள் | பிணையில் சென்ற நாள் | எதிரி மீதான குற்றம் | எதிரி மீதான குற்றம் முடிவு |
|---|---|---|---|---|
| **விஜயன்** | 27.04.2012 | 27.04.2012 | எதிரி மீது இதச பிரிவு 304(A)–ன்–ன் கீழ் | எதிரி இதச பிரிவு 304(A)–ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு 11.01.2013 –ம் தேதியன்று விருதுநகர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2ல் சி.சி.9/2013 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் சி.சி.513/2025 ஆக எண்ணிடப்பட்டு, 15.07.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு.V.செந்தில்குமார், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ரமேஷ்., B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், சாட்சிய, சான்றாவணங்களை பரசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

1. காரியாபட்டி காவல்நிலைய காவல் ஆய்வாளர் எதிரி மீது குற்ற எண்.163/2012 இதச பிரிவு 304(A)–ன் கீழ் குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

இவ்வழக்கில் கடந்த 26.04.2012 ம் தேதி கலை 7.40 மணிக்கு மதுரை – அருப்புக்கோட்டை NH 45 B நான்கு வழி சாலையில் எதிரி TN 38 BL 9384 என்ற பதிவெண் கொண்ட சிப்ட் மாருதி காரை அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்து அவருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த TN 67 AE 2127 TVS Heavy Duty என்ற பதிவெண்

கொண்ட இருசக்கர வாகனத்தின் பின்புறம் பயங்கரமாக மோதியதில் இருசக்கர வாகனத்தை ஓட்டி போன இளங்கோவன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காக, காரியாபட்டி காவல் ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவு 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3.புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்த நீதிமன்றம் எதிரியின் குற்றச்செயல் குறித்து அடிப்படை முகாந்திரம் இருப்பதாக கருதியதால் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பியது. அழைப்பாணையின் பேரில் எதிரி இந்த நீதிமன்றத்தில் ஆஜராகினார். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

4.எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். இருதரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. எதிரியின் கருத்தும் கேட்கப்பட்டது. எதிரி மீதான குற்றச்சாட்டு குறித்து அடிப்படை முகாந்திரம் இருந்த காரணத்தால் எதிரி மீது இதச பிரிவு 304(A) –ன் கீழான குற்றம் குறித்து வாசித்து விளக்கி கூறி வினவப்பட்டது. எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்புச் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5.அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**6.அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :–**

6(1). அ.சா.1 லிங்கத்துரை புகார்தாரர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில், கடந்த 24.06.2012 ம் தேதி காலை சுமார் 6.30 மணி அளவில் தனது மச்சான் TN 67 AE 2127 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் எக்சல் வண்டியை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வக்கணாங்குண்டு இணைப்பு சாலை அருகே வந்து கொண்டிருந்தார் என்றும், தான் அவருக்கு பின்னால் தெற்கிலிருந்து வடக்கு

நோக்கி சென்று கொண்டிருந்த போது மாருதி சிப்ட் கார் எண்.9394 என்ற வண்டி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிகவேகமாக வந்து தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த தனது மச்சான் வண்டியில் மோதியதில் அவர் கீழே விழுந்து தலையில் காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், அந்த காரை விஜயன் என்பவர் ஓட்டி வந்தார் என்பதை தெரிந்து கொண்டேன் என்றும், பின்னர் காரியாபட்டி காவல் நிலையத்தில் புகார் மனு அசா,ஆ.1 கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(2). அசா.2 ஜெயபால் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம் தேதி காலை 7.40 மணிக்கு கட்டிட வேலைக்கு ஆட்களை கூப்பிடுவதற்காக தனது அண்ணன் ஒரு இருசக்கர வாகனத்திலும், அவரை தொடர்ந்து தான் ஒரு இருசக்கர வாகனத்திலும் தோணுகால் போய்விட்டு மீண்டும் காரியாபட்டிக்கு வரும் போது தன் அண்ணன் அவர் ஓட்டி வந்த TN 67 AE 2127 என்ற பதிவெண் டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்காக சென்று கொண்டிருந்த போது, தனக்கு பின்னால் ஒரு கார் அதிகவேகமாக தன் பின்னால் இருந்து வந்து தன்னை ஓவர்டேக் செய்து, தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த தன் அண்ணனின் இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், தான் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கிபோய் சென்று பார்த்த போது தன் அண்ணன் கீழே விழுந்து அந்த இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், லிங்கத்துரைக்கு லேசான காயம் ஏற்பட்டிருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(3). அசா.3 சியாமளா சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம் தேதி காலை 7.40 மணிக்கு வேலைக்கு ஆட்களை அழைத்துவர சென்றுவிட்டு, திரும்ப வரும் போது, வக்கனாங்குண்டு அருகில் தன் கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் வேகமாக வந்த ஒரு கார் தன் கணவரின் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் தனது கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், லிங்கத்துரையும், ஜெயபாலும் தனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(4). அசா4 சங்கரபாண்டி தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம் தேதி காலை தான் நிலைய பொறுப்பில் இருந்த போது வாகன விபத்தில் இறந்து போன இளங்கோவன் என்பவர் பிரேதத்தை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து மருத்துவரிடம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்து, பிரேதத்தை இறந்து போன நபரின் உறவினர்களிடம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(5). அசா.5 முத்தையா பார்வை மகஜர் சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில் கடந்த 2012 ம் வருடம் ஒரு நாள் தான் காரியாபட்டி போலீசார் ஒரு வாகன விபத்து வழக்கு சம்மந்தமாக வக்கனாங்குண்டு சந்திப்பில் சம்பவ இடத்தை பார்வையிட்டு தன் முன்னிலையிலும், அழகர்சாமி முன்னிலையிலும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், பார்வை மகஜர் அசா.ஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(6). அசா.6 அழகர்சாமி பார்வை மகஜர் சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில் கடந்த 2012 ம் வருடம் ஒரு நாள் தான் காரியாபட்டி போலீசார் ஒரு வாகன விபத்து வழக்கு சம்மந்தமாக வக்கனாங்குண்டு விலக்கில் வைத்து சம்பவ இடத்தை பார்வையிட்டு தன் முன்னிலையிலும், முத்தையாதேவர் முன்னிலையிலும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், முத்தையாதேவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(7). அசா.7 முருகன் தனது சாட்சியத்தில், கடந்த 2012 ம் வருடம் காரியாபட்டி மெயின் தேவர் சிலை அருகே 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காரியாபட்டி காவல் நிலையத்திலிருந்து கொடுத்த தகவலின் பேரில் வாகன விபத்தில் இறந்த நபரை தன்னுடைய ஆம்புலன்ஸ் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு தன் ஓட்டுநர் மூலம் அனுப்பி வைத்தேன் என்றும், தன்னுடைய ஆம்புலன்சில் அனுப்பி வைத்த நபர் எவ்வாறு இறந்தார் என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(8). அசா.8 மகேஷ்வரன் (மருத்துவர்) தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் இளங்கோவன் என்பவரை பிரேத பரிசோதனை செய்வதற்காக காரியாபட்டி காவல் ஆய்வாளரிடமிருந்து கடிதம் பெற்று சுமார் 3.00 மணியளவில் பிரேத பரிசோதனை செய்தேன் என்றும், அவரை பரிசோதனை செய்ததில் இடது முழங்காலில் 4x3x0.5 c.m அளவில் சிதைந்த காயமும், வலது முழங்காலில் 1x1 x0.5 c.m அளவில் சிதைந்த காயமும், மூக்கிலும், வாயிலும் ரத்த காயமும், பின்னந்தலையில் 10x10 x2 c.m அளவில் சிதைந்த காயமும், உடல் உள்ளுறுப்புகள், மார்பு பகுதி, வயிற்றுப்பகுதி நல்ல நிலையில் இருந்தது என்றும், தலையின் பக்கவாட்டிலும், பின்னந்தலையிலும் கபால எலும்பு உடைந்து காணப்பட்டது என்றும், தலையின் உட்புறம் சுமார் 300 ML அளவிற்கு இரத்தம் உறைந்து காணப்பட்டது என்றும், வாகன விபத்தில் தலைக்காயம் ஏற்பட்டு மூளை பாதிப்பால் இறந்துவிட்டார் என்று பிரேத பரிசோதனை அறிக்கை அசா.ஆ.3 வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6(9). அசா.9 வெற்றிவேல் (சார்பு ஆய்வாளர்) தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம தேதி தான் காரியாபட்டி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது நெடுங்குளத்தை சேர்ந்த கந்தசாமி மகன் லிங்கத்துரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.163/12 பிரிவு 304(A) இதச படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.4 பதிவு செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(10). அசா.10 கண்ணன் (மோட்டார் வாகன ஆய்வாளர்) தனது சாட்சியத்தில், கடந்த 27.04.2012 ம் தேதி மாலை 4.50 மணியளவில் காரியாபட்டி காவல் நிலைய குற்ற எண்.163/12 வழக்கில் சம்மந்தப்பட்ட TN 38 BL 9384 என்ற காரினை ஆய்வு செய்த போது முன்பக்க காறுத்தடைக் கண்ணாடி இடது புறம் சேதமடைந்திருந்தது என்றும், பேனெட்டின் மையப்பகுதி உள்புறமாக நெளிந்திருந்தது என்றும், முன்பக்க பம்பரின் மையப்பகுதி சேதமடைந்திருந்தது என்றும், முன்பக்க கிரில் சேதமடைந்திருந்தது என்றும், ரேடியேட்டர் சேதமடைந்து உட்புறமாக அழுத்தப்பட்டிருந்தது என்றும், வாகனத்தில் தடையை ஆய்வுக்கு

உட்படுத்தமுடியவில்லை என்றும், இந்த வாகன விபத்தானது எந்த ஒரு இயந்திரக்கோளாறினாலும் ஏற்படவில்லை என்று மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அசா.ஆ.5 வழங்கினேன் என்றும், இதே வழக்கில் சம்மந்தப்பட்ட TN 67 AE 2127 என்ற இருசக்கர வாகனத்தையும் கடந்த 02.05.2012 ம் மாலை 4.30 மணியளவில் விருதுநகர் அலுவலக வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வு செய்தேன் என்றும், டெய்ல்லேம்ப் கார் பைப், பின்பக்க பதிவு எண் பலகை சேதமடைந்திருந்தது என்றும், பின்சக்கர மக்காட்டின் பின்புறம் நெளிந்திருந்தது என்றும், தடைகள் மற்றும் டயர்கள் நல்ல நிலைமையில் இருந்தது என்றும், இந்த வாகன விபத்தானது எந்த ஒரு இயந்திரக்கோளாறினாலும் ஏற்படவில்லை என்று மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அசா.ஆ.6 வழங்கினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(11). அசா.11 செல்வராஜ் (காவல் ஆய்வாளர்) தனது சாட்சியத்தில், கடந்த 2012 ம் வருடம் காரியாபட்டி காவல் நிலைய குற்ற எண்.163/12 பிரிவு 304(A) இதச வழக்கை ஆய்வாளர் மணிவண்ணன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் அழகர்சாமி மற்றும் முத்தையா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ( அசா.ஆ.7 ) தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்து போன இளங்கோவன் என்பவரின் பிரேதத்தைஅருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை அசா.ஆ.8 பெற்றும், பின்னர் சம்பவ சாட்சிகளான லிங்கத்துரை, ஜெயபால், சியாமளா, முருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் 10.05.2012 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார் என்றும், பின்னர் 10.06.2012 ம் தேதி அருப்புக்கோட்டை அரசு மருத்துவர் மகேஷ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார் என்றும், பின்னர் அவரது விசாரணையை முடித்துக்கொண்டு எதிரி மீது பிரிவு 304(A) இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் விளக்கி கூறி கு.வி.மு.ச.பிரிவு 313(1) (b)ன் கீழ் வினவிய போது, எதிரி அவை அனைத்தும் பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கும் பொய் வழக்கென்று மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

8.பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன.

9.அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் வாய்மொழி சாட்சியத்தின் மூலம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10.எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றும், இழப்பீடு பெறுவதற்காக இந்த எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கே ஜோடிக்கப்பட்ட ஒரு பொய் வழக்கு என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதம் எடுத்துரைத்தார்.

**11.<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:–**

(அ).எதிரி மீது இதச பிரிவு 304(A)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதா?

(ஆ).ஆம் எனில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன என்பதேயாகும்.

**12.<u>பரிசீலனையும் தீர்வும்</u>:–**

12(1). இவ்வழக்கில் கடந்த 26.04.2012 ம் தேதி கலை 7.40 மணிக்கு மதுரை – அருப்புக்கோட்டை NH 45 B நான்கு வழி சாலையில் எதிரி TN 38 BL 9384 என்ற பதிவெண் கொண்ட சிப்ட் மாருதி காரை அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்து அவருக்கு

முன்னால் சென்று கொண்டிருந்த TN 67 AE 2127 TVS Heavy Duty என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் பின்புறம் பயங்கரமாக மோதியதில் இருசக்கர வாகனத்தை ஓட்டி போன இளங்கோவன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியதாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

12(2).இவ்வழக்கு விபத்து வழக்கு என்பதால் இதச பிரிவுகள் 279, 337, 304–A ன் கீழான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு மேற்படி பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கக்கூறுகளை அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும். விபத்து வழக்கை பொறுத்தவரை 3 இன்றியமையாத ஆக்கக்கூறுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட வேண்டும். அவை யாதேனில் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டினார், விபத்தானது எதிரி கவனக்குறைவு, அதிகவேகம் மற்றும் அஜாக்கிராதை (Rashness) வண்டியை ஓட்டியதால்தான் ஏற்பட்டது, மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயங்கள்தான் விபத்தின் இறந்துபோனவரின் இறப்பிற்கு நேரடி மற்றும் உடனடி காரணமாகும். இந்த 3 ஆக்கக்கூறுகளும் இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பொறுத்து இந்நீதிமன்றம் ஆராய்கிறது.

12(3). அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் கடந்த 24.06.2012 ம் தேதி காலை சுமார் 6.30 மணி அளவில் தனது மச்சான் TN 67 AE 2127 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் எக்சல் வண்டியை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வக்கணாங்குண்டு இணைப்பு சாலை அருகே வந்து கொண்டிருந்தார் என்றும், தான் அவருக்கு பின்னால் தனது இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது மாருதி சிப்ட் கார் எண்.9394 என்ற வண்டி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிகவேகமாக வந்து தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த தனது மச்சான் வண்டியில் மோதியதில் அவர் கீழே விழுந்து தலையில் காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(4). மேலும் அசா.1 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவம் நடந்த போது தான் தோணுகாலில் இருந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான் என்றும், அதே போல் தனது உறவினர்

இளங்கோவன் மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான் என்றும், தான் நேரடியாக விபத்தை பார்த்தேனா அல்லது கூட்டம் கூடிய பின்னர் அங்கு சென்று பார்த்தேனா என்றால் தான் சுமார் 20 மீ தொலைவில் சென்று கொண்டிருந்தேன் என்றும், கூட்டமாக இருந்ததால் வாகனத்தை நிறுத்தி பார்த்தேன் என்றும், தனது உறவினர் சாலையை கடந்திருந்தாலும் மேற்படி விபத்து ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான் என்றும், யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்பது தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா.1 ன் சாட்சியத்திலிருந்து விபத்து நடந்து கூட்டமாக இருந்த போது தான் வாகனத்தை நிறுத்தி பார்த்துள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும் அசா.1 அவரது சாட்சியத்தில் எதிரி தான் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்று எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே அசா.1 ஐ கண்ணுற்ற சாட்சியாக கருத இயலாது.

12(5). அசா.2 ஜெயபால் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம் தேதி காலை 7.40 மணிக்கு கட்டிட வேலைக்கு ஆட்களை கூப்பிடுவதற்காக தோணுகால் போய்விட்டு மீண்டும் காரியாபட்டிக்கு வரும் போது தன் அண்ணன் அவர் ஓட்டி வந்த TN 67 AE 2127 என்ற பதிவெண் டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்காக சென்று கொண்டிருந்த போது, தனக்கு பின்னால் ஒரு கார் அதிகவேகமாக தன் பின்னால் இருந்து வந்து தன்னை ஓவர்டேக் செய்து, தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த தன் அண்ணனின் இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், தான் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கிபோய் சென்று பார்த்த போது தன் அண்ணன் கீழே விழுந்து அந்த இடத்திலேயே இறந்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(6). மேலும் அசா.2 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சம்பவம் எவ்வாறு நடந்தது என்பது குறித்து தனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என்றும், நான்கு சக்கர வாகனம் என்ன வேகத்தில் வந்தது என்பது பற்றி குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரிதான் என்றும், யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்பது பற்றி தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், விபத்தை ஏற்படுத்திய

வாகனத்தின் பதிவெண் தனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் விபத்தை ஏற்படுத்தியது வெள்ளை நிற மாருதி சிப்ட் கார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா.2 ன் சாட்சியத்திலிருந்து எதிரி தான் மேற்படி வாகனத்தை அதிகவேகமாக இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்று குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(7). அசா.3 சியாமளா சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம் தேதி காலை 7.40 மணிக்கு வேலைக்கு ஆட்களை அழைத்துவர சென்றுவிட்டு, திரும்ப வரும் போது, வக்கனாங்குண்டு அருகில் தன் கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் வேகமாக வந்த ஒரு கார் தன் கணவரின் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் தனது கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், லிங்கத்துரையும், ஜெயபாலும் தனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா.3 விபத்திற்கு பின்னிட்டு நடந்த சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.3 கேள்விப்பட்ட சாட்சி என்பதால் அவரது வாக்குமூலத்திற்கு அதிகப்படியான முக்கியத்துவம் தர இயலாது.

12(8). அசா4 சங்கரபாண்டி தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம் தேதி காலை தான் நிலைய பொறுப்பில் இருந்த போது வாகன விபத்தில் இறந்து போன இளங்கோவன் என்பவர் பிரேதத்தை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து மருத்துவரிடம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்து, பிரேதத்தை இறந்து போன நபரின் உறவினர்களிடம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா.4 ன் சாட்சியத்திலிருந்து இளங்கோவன் என்பவருக்கு விபத்து ஏற்பட்டு அதனால் அவர் இறந்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

12(9). அசா.5 முத்தையா மற்றும் அசா.6 அழகர்சாமி பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார்கள். இவர்கள் தங்களது சாட்சியத்தில் கடந்த 2012 ம் வருடம் ஒரு நாள் தான் காரியாபட்டி போலீசார் ஒரு வாகன விபத்து வழக்கு சம்மந்தமாக வக்கனாங்குண்டு

சந்திப்பில் சம்பவ இடத்தை பார்வையிட்டு தங்கள் முன்னிலையிலும், அழகர்சாமி முன்னிலையிலும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் (அசா.ஆ.2) தயார் செய்தார்கள் என்றும், அதில் தாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் போலீசார் சம்பவயிடம் வந்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடங்கள் தயாரித்ததை அசா.5 மற்றும் அசா.6 சாட்சிகள் பார்த்துள்ளார்கள். எனவே அசா.5 மற்றும் அசா.6 ன் சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம் சட்டத்திற்கு உட்பட்டு சரியான முறையில் தயார் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும் அசா.ஆ.2 இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 7 ன் படி தொடர்புடைய பொருண்மை ஆகும். எனவே அசா.5 மற்றும் அசா.6 சாட்சியத்திலிருந்தும், அசா.ஆ.2 ஆவணத்திலிருந்தும் சம்பவ இடத்தை அரசு தரப்பு நிரூபித்துள்ளது.

12(10). அசா.7 முருகன் தனது சாட்சியத்தில், கடந்த 2012 ம் வருடம் காரியாபட்டி மெயின் தேவர் சிலை அருகே 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காரியாபட்டி காவல் நிலையத்திலிருந்து கொடுத்த தகவலின் பேரில் வாகன விபத்தில் இறந்த நபரை தன்னுடைய ஆம்புலன்ஸ் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு தன் ஓட்டுநர் மூலம் அனுப்பி வைத்தேன் என்றும், தன்னுடைய ஆம்புலன்சில் அனுப்பி வைத்த நபர் எவ்வாறு இறந்தார் என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா.7 ன் சாட்சியத்திலிருந்து விபத்தில் இறந்து போன நபரை ஆம்புலன்ஸ் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு ஏற்றி சென்றுள்ளார் என்பது தெரிய வருகிறது.

12(11). அசா.8 மகேஷ்வரன் (மருத்துவர்) தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் இளங்கோவன் என்பவரை பிரேத பரிசோதனை செய்ததில் இடது முழங்காலில் 4x3x0.5 c.m அளவில் சிதைந்த காயமும், வலது முழங்காலில் 1x1 x0.5 c.m அளவில் சிதைந்த காயமும், மூக்கிலும், வாயிலும் ரத்த காயமும், பின்னந்தலையில் 10x10 x2 c.m அளவில் சிதைந்த காயமும், உடல் உள்ளுறுப்புகள், மார்பு பகுதி, வயிற்றுப்பகுதி நல்ல நிலையில் இருந்தது

என்றும், தலையின் பக்கவாட்டிலும், பின்னந்தலையிலும் கபால எலும்பு உடைந்து காணப்பட்டது என்றும், தலையின் உட்புறம் சுமார் 300 ML அளவிற்கு இரத்தம் உறைந்து காணப்பட்டது என்றும், வாகன விபத்தில் தலைக்காயம் ஏற்பட்டு மூளை பாதிப்பால் இறந்துவிட்டார் என்று பிரேத பரிசோதனை அறிக்கை அசா.ஆ.3 வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அசா.8 சாட்சியத்திலிருந்தும், அசா.ஆ.3 ஆவணத்திலிருந்தும் இறந்து போன நபருக்கு விபத்து ஏற்பட்டுள்ளதும், அதன் மூலம் அவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளதும் நம்மால் அறிய முடிகிறது.

12(12). அசா.9 வெற்றிவேல் (சார்பு ஆய்வாளர்) தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2012 ம தேதி தான் காரியாபட்டி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது நெடுங்குளத்தை சேர்ந்த கந்தசாமி மகன் லிங்கத்துரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.163/12 பிரிவு 304(A) இதச படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.4 பதிவு செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.ஆ.4 ஐ பரிசீலிக்கையில், 26.04.2012 ம் தேதியன்று சார்பு ஆய்வாளர் வெற்றிவேல் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்ட (அசா.ஆ.1) புகார் மனுவை பெற்று அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகையினால் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனு காலதாமதமின்றி சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

12(13). மேலும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகன அறிக்கைக்கள் (அசா.ஆ.5 மற்றும் அசா.ஆ.6 ), மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.7), பிரேத விசாரணை அறிக்கை (அசா.ஆ.8) ஆகிய ஆவணங்கள் சரியான முறையில் தயார் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

12(14). அசா.1 முதல் அசா.4 மற்றும் அசா.7 மற்றும் அசா.8 சாட்சியங்களை பரிசீலிக்கும் போது இறந்து போன நபர் இளங்கோவன் என்பவருக்கு விபத்து ஏற்பட்டது என்பதும், அசா.8 ன் சாட்சியத்திலிருந்தும், அசா.ஆ.3 மற்றும் அசா.ஆ.8

ஆவணத்திலிருந்தும் இறந்து போன நபர் இளங்கோவன் என்பவர் விபத்தினால் தான் இறந்தார் என்பதும் தெரிய வருகிறது. மேலும் (அ.சா.ஆ.5) மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசிலீக்கும் போது TN 38 BL 9384 என்ற பதிவெண் கொண்ட விபத்தை ஏற்படுத்திய சிப்ட் காரில் உள்ள சேதங்கள் இவ்வாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

***1). Front W/s glass L/s damaged.***

***2). Bonnet center portion dented inwardly.***

***3). Front bumper center portion damaged.***

***4). Front grill damaged.***

***5). Radiator damaged & pressed inside***

மேலும் (அ.சா.ஆ.6) மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசிலீக்கும் போது TN 67 AE 2127 என்ற பதிவெண் கொண்ட விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தில் இவ்வாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

***1). Tail lamp damaged***

***2). Rear number plate damaged***

***3). Tail lamp guard pipe damaged***

***4). Rear wheel mudguard rear sode damaged.***

அரசு தரப்பால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசா.ஆ.6 ஆவணத்தை பரிசீலிக்கும் போது இருசக்கர வாகனம் விபத்திற்கு உள்ளானது என்பது தெரிய வருகிறது. மேற்கூறிய காரணங்களை வைத்து பார்க்கும் போது TN 38 BL 9384 என்ற பதிவெண் கொண்ட விபத்தை ஏற்படுத்திய சிப்ட் கார் மோதி விபத்து ஏற்பட்டதினால் தான் இளங்கோவன் இறந்தார் என்பதை அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளது.

12(15). மேலும் அரசு தரப்பு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசா.ஆ.2 மற்றும் அசா.ஆ.7 ஆன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முக்கியமான ஆவணம் ஆகும். அசா.ஆ.2 ஐ பரிசீலினை செய்கையில் விபத்தானது நான்கு வழி

சாலையான மதுரை – அருப்புக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வக்கானங்குண்டு சந்திப்பு அருகே விபத்து நடந்துள்ளதாக தெரிகிறது. மேலும் அசா.ஆ.7 மாதிரி வரைபடத்தை பரிசீலினை செய்கையில் விபத்து நடந்த இடம் ரோட்டின் நடுப்பகுதியாக காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் TN 67 AE 2127 என்ற பதிவெண் கொண்ட விபத்திற்குள்ளான இருசக்கர வாகனம் ஒரு புரத்திலிருந்து மறுபுரம் உள்ள சாலையை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்பதை நம்மால் அறிய முடிகிறது. மேலும் அசா.1 அவரது சாட்சியத்தில் தனது உறவினர் சாலையை கடந்திருந்தாலும் மேற்படி விபத்து ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(16). மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **<u>Mahadeo Hari Lokre Vs The State of Maharshtra reported in AIR 1972 SC 221</u>** என்ற வழக்கில் இவ்வாறாக கூறியுள்ளது

*“ That would mean that if Ravikant suddenly crossed the road from West to East without taking note of the approaching bus there was every possibility of his dashing against the bus with out the Driver becoming aware of his crossing till it was too late. If a person suddenly crosses the road the Bus Driver, however slowly may be driving may not be in a position to save the accident. Therefore, it will not be possible to hold that the Bus Driver was negligent.”*

12(17). இந்த வழக்கில் சம்பவம் நடந்தது நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை ஆகும். தேசிய நெடுஞ்சாலையில் ஒரு சாலையை கடந்து மறுபக்கம் கடந்து செல்வதற்கு ஜங்சனில் நின்று மறுபுரம் வாகனங்கள் வராத போது தான் கடக்க வேண்டும். இந்த வழக்கில் TN 67 AE 2127 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை இயக்கிய நபர் வாகனம் சாலையை மறுபக்கம் கடந்த போது வாகனங்கள் எதுவும் வராத போது தான் கடந்தார் என்று அசா.1 மற்றும் அசா.2 எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் நான்கு வழி சாலையில் செல்லும் போது திடீரென்று ஒரு வாகனம் மறுபக்கத்திலிருந்து குறுக்கில் வந்தால் வாகனத்தை உடனே நிறுத்திவிட

முடியாது. மேற்சொன்ன முன்தீர்ப்பை வைத்து பார்க்கும் போது இருசக்கர வாகனம் சாலையை கடந்து மறுபக்கம் வந்த போது தான் விபத்து ஏற்பட்டது என்பதால் TN 38 BL 9384 என்ற பதிவெண் கொண்ட விபத்தை ஏற்படுத்திய சிப்ட் காரை இயக்கிய ஓட்டுநர் மெதுவாக சென்றிருந்தாலும் விபத்தை ஏற்படுத்தாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை என்ற கருத்தும் எழுகிறது. மேலும் அரசு தரப்பு எதிரியின் அடையாளம் (Identity of the Accused) மற்றும் எதிரி தான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் TN 38 BL 9384 என்ற பதிவெண் கொண்ட சிப்ட் காரை ஓட்டி வந்து விபத்தை விபத்தை ஏற்படுத்தினார் என்பதை நிரூபிக்க வேண்டும். ஆனால் நாம் முன்னரே தீர்மனித்தது போல் அரசு தரப்பு எதிரி தான் வாகனத்தை அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக செயல்பட்டு விபத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பு எதிரிக்கெதிரான குற்றச்சாட்டை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த வழக்கில் பல சந்தேகங்கள் எழுகின்றன. மேற்படி (Benefit of doubt) சந்தேகத்தின் பலனை அடைய எதிரிக்கு அருகதை உண்டு என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இறுதியாக</u>**,

13. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவு 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மூலமும், நம்பத்தகுந்த ஆவணங்கள் மூலமும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு தகுந்த முறையில் நிரூபணம் செய்யப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)/பிரிவு 278(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

14. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப் படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

15. எதிரி குவிமுச பிரிவு 437–A/ 481 BNSS பிரிவின் கீழ் ரூ.10,000/–த்திற்கான சொந்த பத்திரம் அல்லது ஜாமீன் பத்திரம் வழங்க வேண்டுமென்றும், இந்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட எந்தவொரு மேல்முறையீடு அல்லது மனு

தொடர்பாக நீதிமன்றம் அறிவிப்பை வெளியிடும்போதும் உரிய நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும், மேலும், மேற்படி பத்திரமானது ஆறு மாத காலத்திற்கு அமலில் இருக்குமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | லிங்கத்துரை |
| அ.சா.2 | – | ஜெயபால் |
| அ.சா.3 | – | சியாமளா |
| அ.சா.4 | – | சங்கரபாண்டி |
| அ.சா.5 | – | முத்தையா |
| அ.சா.6 | – | அழகர்சாமி |
| அ.சா.7 | – | முருகன் |
| அ.சா.8 | – | மகேஷ்வரன் (மருத்துவர்) |
| அ.சா.9 | – | வெற்றிவேல் (சார்பு ஆய்வாளர்) |
| அ.சா.10 | – | கண்ணன் (மோட்டார் வாகன ஆய்வாளர்) |
| அசா.11 | – | செல்வராஜ்(காவல் ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 | – | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | – | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 | – | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 38 BL 9384 என்ற பதிவெண் கொண்ட கார்) |
| அ.த.சா.ஆ.6 | – | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 67 AE 2127 என்ற |

பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம்)

அ.த.சா.ஆ.7 – மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.8 – பிரேத விசாரணை அறிக்கை

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை.

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் :–** இல்லை

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

<u>**குறிப்பு:–**</u>

1). எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2). வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3). வழக்கின் விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

4). எதிரி 27.04.2012 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே காவல்நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.